IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.167/2023

Deposition of Witness for P.W.14

| | | |
|---|---|---|
| NAME | - | திருமதி.அழகுராணி |
| OCCUPATION | - | காவல் ஆய்வாளர், தம்மம்பட்டி காவல் நிலையம், ஆத்தூர் |
| AGE | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.08.2026.

அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் ஆஜர். 1, 3, 4 எதிரிகள் ஆஜர். 6வது எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார். 1, 2, 3, 4, 5, 6 எதிரிகள் வழக்கறிஞர்கள் ஆஜர்.

As per Sec 530 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 recording of evidence ordered to be held through VC Mode. சாட்சி VC மூலமாக சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது ஆத்தூர் உட்கோட்டம் தம்மம்பட்டி வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது குற்ற எண் 191/2019 வழக்கில் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கு எதிரி வீச்சு தினேஷை 24.08.2019 ம் தேதி பகல் 01.00 மணிக்கு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த வீச்சு (எ) தினேஷ் சாட்சிகள் சுந்தரமகாலிங்கம், ராஜன் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் முன்னிலையில் கைது செய்து விசாரிக்க அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.27** ஆகும். எதிரி வீச்சு தினேஷை நீதிமன்ற

காவலுக்கு உட்படுத்தினேன். எதிரி வீச்சு தினேஷ் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சுந்தரமகாலிங்கம், கிராம நிர்வாக அலுவலர் ராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சடல கூராய்வு செய்த மருத்துவர் கலைச்செல்வியை விசாரித்து சடலகூராய்வு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வட்டார தடய அறிவியல் அலுவலர் திருமதி.விஜயலட்சுமி அவர்களை விசாரித்து தடய அறிவியல் அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வட்டார தடய துணை இயக்குநர் திரு.அசோக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னிட்டு புலன் விசாரணை அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை எதிரிகள் மீது 120(B), 294(b), 506(ii) மற்றும் 302 IPC r/w. 120(B) ன் படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.28** ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை ( அனைத்து எதிரிகள் தரப்பில் )</u>**

3. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால், சரி. புகார்தாரர் கோவிந்தன் கொடுத்த புகாரில் யார் மீதும் சந்தேகம் இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். கோவிந்தன் பால்பண்ணை அருகே சென்று பார்த்த போது கொலையுண்ட செல்வராஜ் உயிருடன் இருந்ததாகவோ தன்னுடன் பேசியதாகவோ புகாரில் சொல்லவில்லை என்றால், சரிதான். சம்பவத்தை பொதுமக்கள் பார்த்ததாகவோ ஆவின்பால் பண்ணையில் இருந்தவர்கள் பார்த்ததாகவோ புகாரில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான்.

4. அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கையில் காலம் 14ல் புகார் கொடுத்த கோவிந்தனுடைய கையெழுத்து பெறப்படவில்லை என்றால், சரியல்ல. எதிரி வீச்சு தினேஷை கைது செய்வதற்கு முன்பாகவே சம்பவ இடம் எது என்று போலீசாருக்கு புகாரின் மூலம் தெரியவந்தது என்றால், சரிதான். எதிரி வீச்சுதினேஷ் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்தவிதமான தகவலும்

பொருண்மையும் கண்டறியப்படவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சம்பவத்தின் போது எதிரி வீச்சு தினேஷ் வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தார் என்றால், சரியல்ல. நாங்கள் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறுதலாக எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல.

5. சம்பவம் நடப்பதற்கு முன்பாக இறந்த செல்வராஜ் தம்பி அ.சா.2 ரமேஷ் முன்னிலையில் எதிரிகள் கொலை செய்வதற்கு சதி திட்டம் தீட்டினார்கள் என்று புகார் பெற்றுள்ளோமா என்றால், இல்லை. எதிரிகளுக்கும், இறந்துபோன செல்வராஜிக்கும் ஏற்கெனவே முன்விரோதம், பகை குறித்து போலீசில் புகார் எதுவும் இல்லை என்றால், இல்லை. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல.

6. இறந்து போன செல்வராஜ் மீது நிறைய வழக்குகள் காவல் நிலையத்தில் உள்ளது என்றால், நினைவில்லை. நான் எனது வழக்கு கோப்பில் இறந்து போன செல்வராஜ் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும், தற்போது வழக்கிற்காக நினைவில்லை என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் இறந்து போன செல்வராஜ் மீது சரித்திர பதிவேடு குற்றவாளி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நினைவில்லை. நான் சரிவர புலன் விசாரணை செய்திருந்தால் சரித்திர பதிவேடு குற்றவாளியான இறந்துபோன செல்வராஜை மற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கியிருக்ககூடும் என தெரிந்திருக்கும் என்றால், சரியல்ல. நீதிமன்றத்திற்கு எதிராக உள்ள இடத்தில் வெடிகுண்டு வைத்தார் என சரித்திர பதிவேடு குற்றவாளியான இறந்துபோன செல்வராஜ் மீது படைகல சட்ட வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால், நினைவில்லை. நீதிமன்றத்திற்கு எதிரே இருந்த கோவில் தேரை எரித்த வழக்கும் மேற்படி சரித்திர பதிவேடு குற்றவாளியான இறந்துபோன செல்வராஜ் மீது நிலுவையில் இருக்கிறது என்றால், நினைவில்லை. தன்னுடைய மாமனாரையே கொலை செய்ததாக

கே.வி.குப்பம் காவல் நிலையத்தில் சரித்திர பதிவேடு குற்றவாளியான இறந்துபோன செல்வராஜ் மீது நிலுவையில் இருக்கிறது என்றால், நினைவில்லை. மேலும் பல குற்ற வழக்குகள் சரித்திர பதிவேடு குற்றவாளியான இறந்துபோன செல்வராஜ் மீது நிலுவையில் இருக்கிறது என்றும், நான்சரிவர புலன் விசாரணை செய்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்திருக்கும் என்றும், தவறுதலாக வழக்கை முடிப்பதற்காக எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

7. இறந்து போன செல்வராஜின் தந்தை கோவிந்தன் தனது மகனின் கொலைக்கு உயரதிகாரிகளிடம் மனு கொடுத்ததால் வழக்கை முடிப்பதற்காக நானும் எனக்கு முன்பிருந்த அதிகாரியும் சரிவர விசாரிக்காமல் எதிரிகள் மீது வழக்கில் தவறாக சம்மந்தப்படாத நபர்களான எதிரிகள் மீது சேர்த்துள்ளோம் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல.

Ensured that the witness evidence is recorded through video conferencing is not tutored and witness is not in the company of any body at the time.

Typed to my dictation in open Court, read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be correct.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.08.05 02:14:33 +0600

Additional District Judge(FTC),
Vellore.